1986 மே 9]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைப் புறக்கணித்ததைப் போல உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியல்ல. அது விடப்பட்டிருக்கும். இந்த ஆண்டு சேர்க்கப்படும். 1983–84-ஆம் ஆண்டு, ரூ. 8,12,000 செலவில் 9.719 பேர்கள் இதன் மூலமாகப் பயன் அடைந்திருக்கிறார்கள். 1984–85-ல், ரூ. 5,59,000 செலவில் 7,025 பேர்கள் பயன் அடைகின்ற சூழ்நிலையில் அந்த மக்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக, குறிப்பாக, ஆதி திராவிடர்கள் ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைகின்ற வகையில்தான் இந்தத் திட்டங்கள் செயல்படுகின்ற நிலைமையிருக்கின்றது. ஆதி திராவிடர்கள் ஆயிரம் பேர்கள் இருந்தால்தான் அந்த ஒன்றியத்தை கிளஸ்டர் வில்லேஜாகத் தேர்ந்தெடுத்து அதன்மூலம் இந்தத் திட்டம் செயலாக்கப்படும் சூழ்நிலையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகாரி மீது அன்டச்சபிலிட்டி சட்டத்தின்கீழ் வழக்கு போடப்படுமா என்று கேட்டார்கள். அதிகாரி, புறக்கணிக்கிற நிலையில் எதுவும் செய்யவில்லை. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் செயல்படுவது குறிப்பிட்ட இடத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85-ல் ஆண்டு இந்த கிளஸ்டர் திட்டத்தின் மூலமாக, நிலக்கோட்டை எடுக்கப்பட்டது. அங்கே 10 இடங்களில், கிட்டத்தட்ட, ரூ. 2–3/4 இலட்சத்தில் ஒரு கட்டிடம், ரூ. 1–3/4 இலட்சத்தில ஒரு கட்டிடம், ஆக, ரூ. 41/2 இலட்சம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டு இன்னும் சரியான முறையிலே, முடிவு பெறாமல் இருக்கிறது. ஒவ்வொரு யூனியனிலும் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள கிட்டத்தட்ட ஆயிரம் மக்களுக்கு மத்திய அரசு நிதியுதவியின் மூலமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. துரிதமாக அந்த மக்களைத் தேர்ந்தெடுத்து, விரைவிலே அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, விரைவிலே செயல்படுத்த ஆவன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொம்மியன்பட்டி ஆதிதிராவிடர்களுக்குக் குடியிருப்புகள்.

திரு. செ செம்மலை —*640 * வினா எண் 5179

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் பொம்மியன் பட்டி ஆதி திராவிடர்களுக்கு ''தாட்கோ'' மூலமாக குடியிருப் புகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப் படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) ஆம்.
(ஆ) அரசின் ஆய்விலுள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் தமிழகம் முழுவதும் தாட்கோ மூலமாக எத்தனை வீடுகள் கட்டப்பட இருக்கின்றன என்ற விவரத்தையும் அதற்காக இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர் கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85ஆம் ஆண்டில் மட்டும் 3,222 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1 கோடியே 93 இலட்சம் ஒதுக்கப்பட்டு, செயல்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், 1986—87இல் இதய தெய்வம் புரட்சித் தலைவர் 5 இலட்சம் வீடுகள் கட்டு கின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் காரண மாக, அதை எப்படிப் பல துறைகளில் விடலாம் ஆர்.எல். இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ, ஹவுசிங் போர்ட், போன்ற இப்படிப்பட்ட நிறுவனங்கள் மூலமாக ஒதுக்கிக் கொடுத்து, செயல்படுகின்ற சூழ்நிலையில் அதை இந்த ஆண்டு செயல் படுத்துகின்ற திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதன் பிறகுதான் எத்தனை கோடி ரூபாயில் செயல்படும் என் பதைத் தெரிவிக்க முடியும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, இந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு வீடு கட்டக் கொடுக்கப்படுகிற தொகைக் குறைவாக இருப்பதாக இந்த ஆதி திராவிட மக்கள் தெரிவிக்கிறார்கள். கொடுக்கப் படுகிற அந்தத் தொகையிலே, முழுமையாக அந்த வீடுகளைக் கட்ட முடியவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. எனவே, அந்தத் தொகைகளை உயர்த்திக் கொடுக்க அரசு பரிசீலித்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி அதிகப் படுத்துகிற நேரத்தில், எவ்வளவு தொகை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ 6,000 போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். என்னுடைய மானிய கோரிக்கையில் எல்லோரும் பேசினார்கள். அதன் காரணமாக ரூ. 6,000 என்பதை ரூ. 10,000 ஆக உயர்த்துகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு றுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.